நவம்பர் - 2013

திருவள்ளுவர் ஆண்டு 2044

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

தொகுதி : 58
பகுதி : 1

விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




மதுரைத் தமிழ்ச்சங்கம்,
செந்தமிழ்க் கல்லூரியில்
நடைபெற்ற
'திருக்குறளில் முத்தமிழ்ச்
சிந்தனைகள்'
கருத்தரங்கத்தினைச்
செந்தமிழ்க்கல்லூரிச்
செயலாளர்
திருமிகு. கோச்சடை
இரா. குருசாமி அவர்கள்
தொடங்கி வைத்தார்கள்.
உடன்
திரு. கருர் சுந்தரமகாலிங்கம்
அவர்கள்,
கல்லூரி முதல்வர்
முனைவர். மு.மீனா
அவர்கள் மற்றும்
பேராசிரியர்கள்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 58 திங்கள் இதழ்

பகுதி : 1 திருவள்ளுவர் ஆண்டு 2044

நவம்பர் 2013




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


ஆசிரியர்

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சாக்ராடீசும் சிவபெருமான் நஞ்சுண்டதும் | தருமையாதீனப் புலவர் வித்துவான் தா. குருசாமி தேசிகர் | 4 |
| ஒன்பதின் ஒய்யாரம் | தமிழாகரர் தெ. முருகசாமி | 7 |
| இந்த வாரம் | கலாரசிகன் | 10 |
| திருக்குறளில் மெய்ப்பாடுகள் | [illegible] | 12 |
| தமிழிலக்கியங்களில் அறச்சிந்தனைகள் | முனைவர் க. இராசசேகரன் | 14 |
| தேடல் | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 20 |
| மீமாம்சையின் கடமைக் கோட்பாட்டின் பின்புலம் | முனைவர் பி.ஆர். நரசிம்மன் | 21 |
| இயற்கைக் காட்சியும் இறைவன் மாட்சியும் ! | புலவர் சி. பாண்டுரங்கன் | 27 |

# இதழ் மணம்

அன்புடையீர், வணக்கம்.

ஆன்மிக மணம் கமழும் மலராக இம்மாத இதழ் வெளிவருகிறது. வள்ளுவரின் பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் என்னும் கருத்தினைச் சாக்ரடீசுவின் நஞ்சுண்ணுதலோடு ஒப்பிட்ட ஆய்வுத்தரவினை மறுத்துள்ள புலவர் குருசாமி தேசிகர் அவர்கள் சிவபெருமானின் நஞ்சுண்ணும் கருத்தியலோடு தமிழாய்வாளர்கள் ஆய்வு செய்தல் வேண்டும் என்று ஆய்வாளர்களுக்குப் புதுகோணத்தைச் சுட்டிக் காட்டியுள்ளமை போற்றத்தக்கது.

தமிழ் எண்களில் ஒன்பது என்னும் எண்ணின் மாறுபட்ட பொருண்மையை விளக்கிக் காட்டியுள்ள தமிழாகரர் முருகசாமி அவர்கள், ஒன்றிய மனத்தால் இறைவனை உணரலாம் என்பதை ஞானசம்பந்தரின் 9ஆம் பாடல்வழி புலப்படுத்தியுள்ளமை அருமையிலும் அருமை !

திருக்குறள் ஆய்வினைத் தொடர்ந்து எழுதிவரும் ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் இம்மாத இதழில் எட்டு மெய்ப்பாடுகள் அமைந்த திருக்குறள்களை எடுத்துக்காட்டி, வள்ளுவரைப் பாராட்டியுள்ளார்.

தமிழிலக்கியங்கள் அறத்தின் பாதுகாப்புப் பெட்டகமாகத் திகழ்வதைத் தமிழிலக்கியங்களில் அறச் சிந்தனைகள் என்னும் கட்டுரை விளக்கியுள்ளது.

முயற்சி திருவினையாக்கும் என்பதைக் கவிஞர் வேழவேந்தன் அவர்கள் தேடல் என்னும் கவியாக்கி, இன்றைய இளைஞர்களை விழிப்பூட்டிய திறம் பாராட்டிற்குரியது.

மெய்ப்பொருளியல் பிரிவுகளில் ஒன்றான மீமாம்சை குறித்த தரவுகளை எளிமையாக அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் முனைவர் நரசிம்மன் வழங்கியுள்ள கட்டுரை போற்றுதலுக்குரியது.

தமிழிலக்கியங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இயற்கைக் காட்சியில் நமக்கெல்லாம் இறைவன் மாட்சியை எடுத்துக்காட்டி சிறப்புற விளக்கியுள்ளார் புலவர் பாண்டுரங்கன் அவர்கள்.

தமிழ் ஆய்வாளர்களுக்கு இறைத்தத்துவம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளத் தூண்டுகோலாக இம்மாத இதழ் தங்களின் கையில் தவழ்கிறது.

**ஆசிரியர்**

# சாக்ரடீசும் சிவபெருமான் நஞ்சுண்டதும்

தருமையாதீனப் புலவர்
வித்துவான் தா. குருசாமி தேசிகர்
மதுரை – 1

பாரதிதாசன் பல்கலைக்கழகம் கட்டளைச் சொற்பொழிவுகளைத் தொகுத்து பல்கலைத் தமிழ் இலக்கியம் என்ற தலைப்பில் 2008ஆம் ஆண்டு வெளியிட்ட நூல் அரிய கருத்துக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒரு கட்டளைச் சொற்பொழிவான வள்ளுவரும் பிளேடோவும் என்ற கட்டுரையில் சாக்ரடீஸ் நஞ்சுண்டு இறந்த சம்பவம் விளக்கப்பட்டது. ஒரு திரைப்படத்தில் சாக்ரடீஸின் நஞ்சுண்ட சம்பவமும் விவரிக்கப்பட்டுள்ளதை நம் தமிழ் மக்கள் அறிந்திருப்பர். இச்சம்பவத்தை முனைவர் ப. மருதநாயகம் ஆங்கில நூலின் மேற்கோளை அப்படியே வழங்கி திருக்குறள் ஒன்றை ஒப்பிட்டுக் காட்டுவார். அவர் கருத்தை நாம் அப்படியே காண்போம்.

## நஞ்சுண்ட தாக்கம்

திருக்குறளில் சில பாகங்கள் சாக்ரடீஸின் வாழ்வு பற்றியும், அவருடைய அறிவுரைகள் பற்றியும் பிளேட்டோ குறிப்பிடுவனவற்றைத் திருவள்ளுவர் அறிந்திருக்கலாம் என்பது ஆங்கிலம் நன்கு கற்ற கட்டுரையாளரின் கருதுகோளாகும். ரோமானியத் தொடர்பு பண்டைத் தமிழ் வேந்தர்கட்கு இருந்த தொடர்பால் இச்சம்பவங்களை அறிந்து திருவள்ளுவர்,

பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க

நாகரிகம் வேண்டு பவர் - என்னும் குறள் படைத்துள்ளார். அது சாக்ரடீஸ் வாழ்வின் தாக்கமாக இருக்கலாம் என்று கருதுவார் கட்டுரையாளர். கிரேக்கத் தத்துவ மேதையின் இறப்பை மறைமுகமாய்ச் சுட்டலாம் எனும் மரபு வழி நம்பிக்கை தமிழறிஞர்களிடம் உண்டு என்றும், இதனை பீடோ (PHAEDO) என்னும் தலைப்பில் அமைந்த பிளேட்டோவின் இறுதிப் பகுதியைக் கட்டுரையாளர் மொழி பெயர்த்துத் தருவதன் வாயிலாகக் கட்டுரையாளர் மெய்மை காண முயல்கிறார்.

## சாக்ரடீஸ் நஞ்சுண்டது

பிளேட்டோவின் எழுத்து வழியாகச் சாக்ரடீஸ் நச்சுக் கோப்பை நஞ்சை மகிழ்வோடு உண்டார். அமைதி அவர் முகத்தில் தாண்டவமாடியது என்றும், பிறர் யாவரும் ஓவென்று கூக்குரலிட்டு அழுதனர் என்றும் கூறுவர். கிரித்தோ என்பவன் மனம் நோகாதவாறு சிறை அதிகாரி கொடுத்த நஞ்சை அச்சவுணர்வோ, முக மாறுதலோ இல்லாமல் அமைதியாகத் தன் நண்பர் எகரேடிசை உற்றுப் பார்த்துவிட்டு நஞ்சுண்டார் சாக்ரடீஸ் என்று கட்டுரையாளர் விவரிப்பார். இச்சம்பவத்தில் தன் நண்பர்களாகிய கிரித்தோ, எகரேடிஸ் மனம் மகிழ சாக்ரடீஸ் நஞ்சுண்டார் என்று சொல்லப்படுகிறது. இக்கருத்தை நற்றிணைப் பாட்டு,

முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்

என்று சிந்தித்து இருக்கிறது. ஒரு வேளை இது கிரேக்க நாட்டுச் சாக்ரடீஸ் வரலாற்றுப் பின்னணியைச் செவி மடுத்து செந்தமிழ்ப் புலவர் பாடியிருக்கலாம் என்றும் கருதுவதற்குக் கட்டுரையாளரின் கருத்து இடந்தருகிறது.

## சிவபெருமானும் சாக்ரடீசும்

சிவபெருமான் நஞ்சுண்ட வரலாறு செந்தமிழ் இலக்கியத்தின் தொன்மை நூல்களிலும், இடைக்கால, கடைக்கால நூல்களிலும் பரவலாகக் காணப்படுகிறது. காரியுண்டிக் கடவுள், நீலகண்டன், மணிகண்டன் முதலிய பெயர்கள் இலக்கியத்தில் காணப்படுகின்றன சிவபெருமானுக்கு,

பரவி வானவர் தானவர் பலரும் கலங்கிட வந்த கார்விடம்
வெருவ உண்டு கந்த அருளாவது என் கொல்?

என்பன போன்ற திருமுறைஅடிகள் எண்ணற்றவை சிவபெருமானின் அருளிப் பாட்டை விளக்குவனவாயுள்ளன.

சிவபெருமான் நஞ்சுண்டும் சாகாதிருந்தார் என்ற வரலாறும், பக்திமை இலக்கியங்களில் பதிவானது போல் புறநானூறு போன்ற முன்னைத் தமிழ் நூல்களிலும் பதிவாகியுள்ளன. ஔவையார் நெல்லிக்கனி பெற்ற போது அதியமானை வாழ்த்தும் போது,

"நீலமணிமிடற்று ஒருவன் போல

மன்னுக பெரும"

என்று வாழ்த்துவார். ஆகவே சிவபெருமான் நஞ்சுண்டு சாகாதிருந்தது போலவே சமயக் குரவரில் ஒருவரான திருநாவுக்கரசருக்குச் சமணர்கள் தந்த நஞ்சு கலந்த பால் உண்டும், எதிரிகளான சமணர்களைத் திருவருளால் உயிர்ப் பிழைத்து வென்றார் என்பதும் அவரது தேவாரத்தால் அறியலாம். வழக்கிலா அமணர் தந்த

நஞ்சமுது ஆக்கினார்,

நனிபள்ளி அடிகளாரே என்பது தேவார அடி.

## ஒப்புமை

பல்கலைக்கழகக் கட்டுரையாசிரியர் சிவபெருமான் நஞ்சுண்டது, திருநாவுக்கரசர் நஞ்சமுதுண்டது பற்றிய புராண வரலாற்றை ஓரளவு சிந்தித்து ஒப்புமை காட்டியிருக்கலாம். புராணம் என்று இதனை ஒதுக்கி விட முடியாது. பண்டைத் தமிழ் இலக்கியங்களில் சிவபெருமான் நஞ்சுண்ட வரலாறு காணப்படுவதால் இவ்வரலாற்றை அறிந்து சாக்ரடீஸ் நஞ்சுண்டு இறந்த போது அமைதியாக இருந்து நிலையாமையை அனைவர்க்கும் உணர்த்தி இறந்தும் இறவாத புகழைப் பெற்றிருக்கலாம் என்று கருதுவதில் ஓரிடையூறுமில்லை. சாக்ரடீஸ் வரலாற்றை உணர்ந்தே வள்ளுவர் குறளருளிச் செய்தார் என்பதை விட முன்னைத் தமிழ்ச் சிவத்தின் பெருமையும் வரலாறும் உணர்ந்தே பெயக்கண்டு நஞ்சுண்டமைவர் என்ற குறளையருளியிருக்கிறார் என்றும் ஆய்வு செய்யலாம். தமிழாய்வாளர் ஆயலாமே!

***இணைத்துணைத்து என்பதொன் றில்லை விருந்தின்***
***துணைத்துணை வேள்விப் பயன்.***

***பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி***
***வேள்வி தலைப்படா தார்.***

# ஒன்பதின் ஒய்யாரம்

தமிழாகரர் தெ. முருகசாமி
புதுச்சேரி - 9

தமிழ்மொழி எண் வரிசையில் ஒன்பது மட்டும் சொல்லாலும் கணித சொற்பொருளாலும் சிந்தைக்குரியதோர் அரிய சொல்லாக உள்ளது.

ஒன்று முதல் எட்டு வரையிலான எண்கள் எண்ணுப் பெயர்களாயுள்ளதோடு வினைப் பொருள் குறிப்பனவாயும் உள்ளன.

ஒன்று - 1, ஒன்றியிரு. இரண்டு - 2, வேறுபடு. மூன்று - 3, இது மூன்று மாற்று வடிவில் முப்படை என்ற பொருள்படும். நான்கு - 4, இது நால் என்ற மாற்றுவடிவில் தொங்கு எனப்படும். ஐந்து - 5, இது ஐ என்ற மாற்றுவடிவில் நொசிவு, குறைவு என்ற பொருள்படும். ஆறு - 6, ஆறுதல், குற்றியலுகர ஈறு இல்லாத ஏழ் என்ற எண் 7 என்றும் எழு என்ற மாற்று வடிவில் எழுக என்றும் பொருள்படும் எட்டு - 8, எட்டிப் பிடி.

இங்ஙனம் பெயரும் வினையுமாகப் பொருள் உணர ஒன்பது என்ற எண்ணிற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் 9 என்பதாகக் குறிக்கப்படும் அச்சொல் ஒன்று குறைந்த பத்து என்பதாகக் கூறப்படுவதாகப் பொருள் உணரப்படும். மேலும் அச்சொல் தொண்டு என்ற மாற்றுச் சொல்லாகவும் பழந்தமிழ் இலக்கியத்தில் வழங்கப்பட்டுள்ளது. கணக்கியல் வகையில் ஏனைய எண்களுக்கு மாறுபட்டதாக உள்ள சிறப்பை நம் முன்னோர்கள் உணர்ந்துள்ளனர்.

திருஞானசம்பந்தர் தாம் பாடிய எல்லாப் பதிகங்களின் ஒன்பதாம் பாடலைத் திருமாலும் பிரமனும் சிவபெருமானின் திருவடியையும் திருமுடியையும் காணப் பெறாததான புராணக் கதைப் பாங்கை உணர்த்துவதாகவே பாடியுள்ளார். ஒன்பது என்ற எண்ணின் சமன்பாட்டின் உண்மையை நுட்பமாக உணர்ந்த சம்பந்தர் ஏற்றத் தாழ்வான நிலையின்றி இறைவனை உணர்ந்து வழிபட உணர்த்திய உத்தியாக இதனைக் கருதலாம்.

சம்பந்தரின் இக்குறிப்பைப் பாம்பறியும் பாம்பின் கால் என்றபடிக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் தாம் பாடிய சோண சைல மாலையில்,

பூம்பொழிற் புகலிக் கிறைவன் நாநிலம் சேர்
புண்ணியத் தலங்களின் அடைந்து

தாம்புனை பதிகந் தொறும்புகழ் சோண
சைலனே கைலைநா யகனே (58)

என்று ஒன்பதாம் பாட்டின் திறத்தைப் புகழ்ந்துரைத்துள்ளார். எனவே ஒன்பதாம் எண்ணிற்குள்ள சிறப்பு தனித்தன்மை உடையது எனத் தெரிகிறது. அதுதான் ஒன்பதின் ஒய்யாரம், அது மூன்று வகைப்படும்.

1. ஒன்பதோடு எந்த எண்ணைப் பெருக்கிக் கூட்டினாலும் தோன்றும் கூட்டுத் தொகை எண் ஒன்பதாகவே இருக்கும்.

9 x 2 = 18 ( 1+8=9)   9 x 8 = 72   (7 + 2 = 9)

இவ்வாறே எந்த எண்ணோடும் ஒன்பது என்ற எண்ணால் பெருக்கிக் கூட்டினாலும் கூட்டுத்தொகை ஒன்பதாகவே இருக்கும்.

14 x 9 = 126 ( 1+2+6=9)

2. ஒன்பதோடு எந்த ஒற்றை இலக்க எண்ணைக் கூட்டினாலும் கூட்டும் அதே ஒற்றை இலக்க எண்ணே கூட்டுத்தொகையில் வரும்.

9 + 2 = 11 ( 1+1=2)   9 +7 = 16   (1 + 6 = 7)

3. ஒன்பதோடு எந்த இரட்டை முதலான இலக்க எண்களைக் கூட்டினாலும் தோன்றும் கூட்டுத் தொகையைத் தனித்தனியே கூட்டினால் கூட்டிய இரட்டை முதலான இலக்க எண்களைக் கூட்டி வரும் கூட்டுத் தொகையே வரும்.

9 + 20 (2+0=2) = 29 (2 +9 = 11; 1 + 1 = 2)

9 + 201 (2+0+1=3) = 210 (2 +1+0 = 3)

இந்த உண்மையைப் பிற எண்களோடு எந்த எண்ணைக் கூட்டிப் பார்த்தாலும் அதே கூட்டுத் தொகை வராததான உண்மையை உணரும் போது தான் ஒன்பதின் முழுமையை உணர முடிகிறது.

எடுத்துக்காட்டாக, 8+ 5 = 13 ( 1+3=4)

13 தனித்தனியே கூட்ட 4 ஆனது, எட்டோடு கூட்டிய 5 என்ற எண்ணுக்குச் சமமாக இல்லை. இவ்வாறே 8+14 ( 1+4=5) = 22 (2+2=4)

14 – கூட்ட 5 ஆகும், 22 கூட்ட 4 ஆகும். சமமாகவில்லை. 8+111 ( 1+1+1=3) = 119 (1+1+9=11, 1+1=2)

111 – கூட்ட 3 ஆகும், 119 கூட்ட அது 11 ஆகி, அதனைக் கூட்ட 2 ஆகும். சமமாகவில்லை.

எனவே 9 என்ற எண் நிலையானதோர் உண்மையை உணர்த்தும் ஏதோ ஒரு குறிக்கோளுடன் கூடிய ஓரெண்ணாக உள்ளதெனத் தெரிகிறது. அந்த யூகந்தான் மனித ஆன்மாவைப் பக்குவப்படுத்தும் சமயப் பார்வையோடு கூடிய கருத்தாக இருக்கும் என எண்ணத் தோன்றுகிறது. அதாவது, ஒன்பதுடன் எந்த எண்ணைப் பெருக்கிக் கூட்டினாலும் இயல்பாகக் கூட்டினாலும் இறுதியில் அமையும் கூட்டுத் தொகை ஒன்பதாகவே வருதல் போல் இடையறாத நமது இறைவழிபாட்டில் இறைவனை நெஞ்சாரக் கூட்டி எண்ணினால் அவன் நம்மினின்றும் நீங்காமல் நம்மிடம் உள்ள ஒன்பது வாயில்களின் அழுக்குகளையும் பெருக்கிக் கூட்டிக் களைந்து நம்மைத் தூய்மைப்படுத்தி ஆட்கொள்வான் என்ற பேருண்மை உணரத் தோன்றுகிறது. இந்தக் கருத்தைத் தான் அப்பர் பெருமான் கீழ்வரும் பாடலாகத் தந்துள்ளார்.

ஒன்ப தொன்பதி யானை யொளிகளி
றொன்ப தொன்பது பல்கணம் சூழவே
ஒன்ப தாமவை தீத்தொழி லின்னுரை
ஒன்ப தொத்துநின் றென்னி ளொடுங்குமே.

திருக்கோயில் இல்லாத ஊரைத் திருவில்லாத ஊர் என்றார் அப்பரடிகள். அப்படித் திருக்கோயில் கட்டுங்கால் ஒன்பதுக்கு ஒன்பதான எண்பத்தோர் சதுரங்கமாகக் கட்டுவர். அந்த எல்லையில் களிறு போன்ற இறைவனையும் பிடி போன்ற உமாதேவியையும் அம்மையப்பராக அமைப்பர். அங்ஙனம் அமைந்த அக்கடவுளரே பதினெண் (9+9=18) கணத்தவர்களோடு எழுந்தருளி வந்து ஆன்மாவைப் பக்குவப்படுத்தி ஐக்கியப்படுத்துங்கால் ஆன்மாவை முன்னேற விடாமல் தடுக்கும் ஒன்பதான ஓட்டை விடயங்களைத் திருத்தி, கூட்டினாலும் பெருக்கிக் கூட்டினாலும் கூட்டுத் தொகை ஒன்பதாகவே வரும் ஒத்த தன்மையைப் போல இறைவன் ஆன்மாவுடன் ஒன்றி விடுவான். அவ்வாறே இறைவன் தன்னுள் ஒடுங்கியுள்ளதாக அப்பர் தம் இறையனுபவத்தைக் குறித்துள்ளார்.

பதியணுகில் பசு பாசம் நிலாவே என்ற திருமூலர் வாக்குப்படி ஒன்பதின் கணக்கியல் சமன்பாட்டையே ஞானசம்பந்தர் நுட்பமாக உணர்ந்து ஒன்பதாம் பாடல் தோறும் அடிமுடிதேடிய கதையைப் பாடினார் போலும்!

நான்கு முகமிருந்தும் பிரமன் ஒருமுகப்பட்டு உணரவில்லை. கையில் சங்கிருந்தும் அதனை ஊதி வழிபாடு செய்யாத திருமாலும் ஒன்றிய மனத்தால் சிவனை அறிய முற்படவில்லை. எனவே அலைமோதும் மனத்தால் உணர முடியாத இறைவன் ஒன்பது என்ற கணக்கியல் சிறப்பில் ஒன்றிய மனத்தால் உணரத் தலைப்படுவான் என்பதே உண்மை.

என்னே ஒன்பதாம் எண்ணின் ஒய்யாரம்!

# இந்த வாரம்

கலாரசிகன்

கடந்த முறை மதுரைக்குச் சென்றிருந்த போது மூத்த பத்திரிகையாளர் தி. அ. ஸ்ரீநிவாசனைச் சந்தித்தேன். இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்து போன்ற பத்திரிகைகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அதைவிட முக்கியமான செய்தி என்னவென்றால், செந்தமிழ் ஆசிரியராக இருந்த திரு. நாராயணையங்காரின் பெயரன் என்பது.

திரு. நாராயணையங்கார் இலக்கணம், இலக்கியம், தருக்கம், சமயம், வரலாறு என்று பன்முகத் தேர்ச்சி பெற்றவர் என்பது மட்டுமல்ல, பன்மொழிப் புலமையும் உடையவர். நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவிய பாண்டித்துரைத் தேவரின் பெருமதிப்புக்குரியவர். இருவரும் முத்துசாமி அய்யங்காரிடம் ஒருசாலை மாணாக்கர்களாக இருந்தவர்கள்.

ரா. ராகவையங்கார், மு. ராகவையங்கார் போன்ற தமிழ்ச் சான்றோரின் சமகாலத்தவரான திரு. நாராயணையங்கார், மதுரையில் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கத்தையும், தமிழ்ச்சங்கம் நடத்தி வரும் செந்தமிழ் இதழையும் பாதுகாப்பதுதான் தனது வாழ்நாள் பணி என்று மதுரையிலேயே இருந்து விட்டதால், ஏனையோரைப் போல விளம்பரம் பெறாமல் போனவர்.

1922-ம் ஆண்டில் இங்கிலாந்தின் வேல்ஸ் இளவரசரின் இந்திய விஜயத்தை முன்னிட்டு, முக்கியமான இந்திய மொழி அறிஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். அப்போது தமிழில் சிறந்த அறிஞராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர் திரு. நாராயணையங்கார்தான். பிரிட்டிஷ் அரசு அவருக்கு வழங்கிய தோடாவும் சால்வையும் இன்னும் அவரது குடும்பத்தினரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

செட்டிநாட்டரசர் ராஜா சர்.அண்ணாமலைச் செட்டியார் மிகப்பெரிய சம்பளம் கொடுத்து, அவரை எப்படியும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக வரவேண்டும் என்று விரும்பிக் கேட்டும்கூட, தனது நண்பரும் புரவலருமான பாண்டித்துரைத் தேவரை விட்டும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தை விட்டும் அசைய மறுத்துவிட்டவர் அவர். செட்டிநாட்டரசர் மட்டுமல்ல ; தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர், தமிழ் வரலாறு எழுதிய தஞ்சாவூர் சீனிவாசப் பிள்ளை, பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போன்ற பல

பேரறிஞர்கள் திரு. நாராயணையங்காருக்கு எழுதிய கடிதங்களை அவருடைய பெயரன் தி.அ. ஸ்ரீநிவாசன் காட்டி மகிழ்ந்தார்.

தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையரின் எண்பதாம் ஆண்டு விழாவில், அவருக்குத் திரு. நாராயணையங்கார் விடுத்த வேண்டுகோளின் விளைவுதான், என் சரித்திரம். கரையான் அரித்து அழியக் கிடந்த அரிய தமிழ்ப் பொக்கிஷங்களைத் தமிழ்த்தாத்தா எப்படி தேடிப்பிடித்துப் பாதுகாத்துத் தந்தார் என்கிற செய்தியே, என் சரித்திரம் எழுதப்படாவிட்டால் தெரியாமல் போயிருக்கும். அதற்காகவே திரு. நாராயணையங்காருக்குத் தமிழ்கூறு நல்லுலகம் கடமைப்பட்டிருக்கிறது.

திரு. நாராயணையங்கார் வான்மீகரும் தமிழும் என்றொரு ஆய்வுக் கட்டுரை எழுதியிருக்கிறார். வான்மீகரும் தமிழும் கட்டுரை ஒரு விரிவான ஆராய்ச்சியாகும். தகுந்த ஆதாரங்களுடன் தனது கருத்தை நிலைநிறுத்துகிறார் திரு. நாராயணையங்கார்.

வான்மீகி முனிவர் தமிழறிந்த வடமொழியாளர்; இராமாயண காலத்தில் முனிவர்களால் தமிழ் மொழி போற்றப்பட்டது. அயோத்தி அரண்மனைக் கண் அரசியல் மொழியாக, வழக்கு மொழியாகச் சிறந்து நின்றது; தமிழ்தான் இராமனாலும், சீதையாலும் பேசப்பட்ட மொழி. அசோகவனத்தில் அனுமன் பிராட்டியுடன் பேசிய மொழி; அரிய மரபுகள் யாவும் வடமொழி இராமாயணத்துள் பொதிந்திருக்குமாறு உபகரித்த மொழி செந்தமிழ் மொழிதான் என்று அந்த ஆய்வில் சான்றுகளுடன் நிருபிக்கிறார் திரு. நாராயணையங்கார்.

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் உதவியோடு 13 ஆண்டுகளுக்கு முன்னால், வான்மீகரும் தமிழும் புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது. சென்னையில் வாழும் பேராசிரியர் பொன்னப்பனிடம் அதன் பிரதி கிடைக்கக் கூடும் என்று தெரிவித்தார் ஸ்ரீநிவாசன். அந்தக் கட்டுரையை ஸ்ரீநிவாசன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து தனது இணையப் பக்கத்தில் வெளியிட்டிருக்கிறார். அவருக்கு ஒரு வேண்டுகோள். தமிழிலும் வெளியிடுங்களேன்.

மறுபிரசுரம் செய்ய வேண்டிய, பரவலான விவாதத்திற்கும், ஆய்வுக்கும் எடுத்துக்கொள்ள வேண்டிய ஒன்று வான்மீகரும் தமிழும் !

**நன்றி : தினமணி**
**தமிழ்மணி 6.10.2013**

# திருக்குறளில் மெய்ப்பாடுகள்

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம்

உய்த்துணர் வின்றி தலைவரு பொருண்மையின்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்.

இது தொல்காப்பியத்தில் உள்ள செய்யுளியலில் 196வது நூற்பாவாகும். இந்நூற்பாவில், செய்யுட் செய்யுங்காலை சுவைபடச் செய்ய வேண்டுதலின் மெய்ப்பாட்டையும் செய்யுள் உறுப்பெனத் தொல்காப்பியர் ஓதியுள்ளார்.

நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று

அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப.

இது தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டியலில் மூன்றாவது நூற்பாவாகும். நகை முதலாகச் சொல்லப்பட்ட எட்டும் மெய்ப்பாடுகள் என்று சொல்லுவர்.

நகை இகழ்ச்சியில் பிறப்பது. அழுகை அவலத்தில் பிறப்பது. இளிவரல் இழிப்பில் பிறப்பது. மருட்கை வியப்பில் பிறப்பது. அச்சம் அஞ்சத்தகுவனவற்றால் பிறப்பது. பெருமிதம் வீரத்தில் பிறப்பது. வெகுளி வெறுக்கத்தக்கனவற்றால் பிறப்பது. உவகை சிருங்காரத்தில் (மகிழ்வில்) பிறப்பது.

இவ்வெட்டு மெய்ப்பாடுகளையும் திருக்குறளில் காணலாம்.

1. அறன்அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன்அழீஇப் பொய்த்து நகை. (குறள் - 182)

2. அல்லல்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. (குறள் - 555)

3. இன்மை ஒருவற்கு இளிவுஅன்று சால்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின். (குறள் - 988)

4. நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி அற்று. (குறள்-1020)

5. பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண். (குறள் - 146)

6. பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். (குறள் - 979)

7. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். (குறள் - 35)

8. இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியில் சோர்வு. (குறள் - 531)

ஒவ்வொரு மெய்ப்பாட்டிற்கும் ஒரு திருக்குறள் எடுத்துகாட்டாகக் கூறப்பட்டுள்ளது. சில மெய்ப்பாடுகள், ஒன்றுக்கு மேற்பட்ட குறட்பாக்களில் அமைந்துள்ளன.

இவ்வெட்டு மெய்ப்பாடுகளும் தோன்றுமாறு செய்யுள் இயற்றினால் அச்செய்யுளை அனைவரும் பாராட்டுவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

---

# வாசகர் வாசகம் (1)

**எத்தனையோ வழிந்தோடும் செந்தமிழ்**

கதிரேசன் அகரத்தை இறைவ னோடு
காட்டியுள்ள உவமையதை நமக்களித்தும்
புதிர்போடும் குறுந்தொகையில் கார்காலத்தின்
போக்குரைத்தும் ஆல் அதனின் சொல்விளக்கம்
உதிர்த்திட்டே திருக்குற்றா லப்புராணம்
உயர்பெரிய புராணத்துச் செய்தி வார்ப்பும்
அதிசிறப்பாய்ப் பாவேந்தர் மொழிபெயர்ப்பும்
அழகுறவே வழிந்தேசெந் தமிழில்ஓடும்.

இப்படிக்கு,
**பாவலர் அறிவரசன்,** திருவோக்கி

# தமிழிலக்கியங்களில் அறச்சிந்தனைகள்

முனைவர் க. இராஜசேகரன்
கும்பகோணம்

## முன்னுரை

பண்டைய தமிழ்ச் சான்றோர் மக்கள் வாழ்க்கையில் பெறுவதற்குரிய உறுதிப் பொருள்களாக அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றினையும் கொண்டனர். அவற்றில் அறமே முதன்மையானதாகக் கருதப்பட்டது. ஆசைகளும், உணர்வுகளும் அறிவுக்குக் கட்டுப்பட்டிருந்தால் அதுவே அறமாகும். தொல்காப்பியம் அறத்திற்கு முதன்மையளித்து அறம், பொருள், இன்பம் என மூன்றாக என்னும் நிலை நிலவியதைச் செய்யுளியலில் அந்நிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற்பொருட்கும் உரிய வென்ப (நூ-1353) எனும் நூற்பாவின் வழி எடுத்துக்காட்டுகின்றது. அறிவுடைய மக்களால் விரும்பி மதித்தற்குரியன. இம்மூன்றையும் மும்முதற்பொருள் எனத் தொல்காப்பியம் சிறப்பிக்கின்றது. மனித வாழ்க்கை எவ்வாறு படிப்படியாக முன்னேறியும் தேவையான மாற்றம் பெற்றும் வளர்கின்றதோ அவ்வாறே அறநெறியும் உடன் வளர்கின்றது. அவ்வகையில் தமிழிலக்கியங்களில் அறச்சிந்தனைகள் எனும் தலைப்பில் இவ்வாய்வுக் கட்டுரை ஆராய முற்படுகிறது.

## சங்க இலக்கியங்களில் அறம்

அறம் என்பது ஈகை எனும் பொருளில் சங்க இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தனி மனித வாழ்வில் இரத்தல் இழிவானது ஆயினும் சமூக வாழ்வில் ஈகை உயர்ந்த அறமாகக் கருதப்பட்டது.

செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பேம் எனின் தப்புந பலவே (புறம் 189)

மேலும்,

ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று (புறம் - 204)

## ஆடவர் - மகளிர் அறம்

மனையறம் புரிதலை மகளிரும், வினையறம் புரிதலை ஆடவரும் மேற்கொண்டதால் இல்லறம் சிறந்து விளங்கியது. பண்டைய தமிழன் மரபுப்படி ஆடவர் வினைமேற்செல்லலை இயல்பாகவும் மகளிர் அதனை மறுத்துக் கூறாது உடன்படுதலைத் தம் பண்பாகவும் கொண்டிருந்தனர். அறம் செய்வதற்குப் பொருள் இன்றியமையாதது. ஆதலால் பொருள்வயிற்பிரிவது ஆடவரது பண்பாகயிருந்தது. இதனை,

வினையே ஆடவர்க்குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென (குறுந். 135)

எனக் குறுந்தொகைப் பாடல் எடுத்துரைக்கின்றது.

ஒருவனுடைய துன்பத்திற்கு அவன் வேண்டுவன அளித்து உதவுவதே ஈகை அறம் - எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி ஒருவருக்கு அளித்தலே ஈகை. இதனை,

ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க்குதவுதல் (கலித் - 133)

எனக் கலித்தொகைக் கூறுகின்றது.

## புறநானூற்றில் அரசியல் அறம்

அரசியல் அமைப்பின் தலைமை மாந்தர்கள் புரிந்த ஆட்சியின் சிறப்பினையும் அவர்கள் மக்களைக் காப்பதற்காகப் பின்பற்றிய அறநெறிகளையும் சங்க இலக்கியப் பாடல்கள் உணர்த்துகின்றன. மக்களுடைய நலன் ஒன்றையே தன் நோக்கமாகக் கொண்டு செங்கோலுடன் வெண்கொற்ற கொடையுடன் ஆட்சி செலுத்திய அரசர்களைக் குடிமக்கள் தங்களின் உயிராகவே கருதினர்.

இதனை,

நெல்லும் உயிர் அன்றே, நீரும் உயிர் அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்

எனும் அடிகளில் தம்முடைய உயிர்ப் பொருளாகவே மன்னர்களைக் கருதும் அளவுக்கு அரசியல் ஆட்சியானது செம்மையாக நிலை பெற்றிருந்தது.

## அரசியலின் அடிப்படை அறம்

பண்டைக் காலத் தமிழகத்தில் அறமே அரசியலமைப்பின் அடித்தளமாக இருந்தது. இதனை,

முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும். (குறள் 388) என்கிறார் வள்ளுவர்.

## பதிற்றுப்பத்தில் சேரமன்னர்களின் அரசியலறம்

சங்க காலத்தில் முடியாட்சி முறை இருந்தாலும் அரசர்கள் எதேச்சதிகாரப் போக்கினைக் கையாளாமல் அறத்தின் வழி ஆட்சி செய்தனர். பரிசிலர் யாராக இருந்தாலும் பரிசு பெறுதற்குரிய தகுதிகள் அவர்களிடம் இல்லையென்றாலும் எல்லாருக்கும் கொடுப்பதைக் கடமையாகக் கொண்டவர்கள். இதனை,

எமர்க்கும் பிறர்க்கும் யாவராயினும்
பரிசினர் மாக்கள் வல்லவராயினும்
கொடைக் கடனமர்ந்து கோடாநெஞ்சனான் (2ஆம் பத்து 20)
(இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்)

என்கிறது அப்பாடல்.

## கம்பராமாயணத்தில் அறம்

கணிப்பொறி யுகம் வந்த பொழுதும் கம்பன் காப்பியம் கூறும் அறக்கருத்துக்கள் என்றும் நினைவில் நிற்கிறது. பிறன்மனை நோக்கா – பெருமை வரவேண்டும் என்று மனிதனுக்கு அறத்தை வலியுறுத்தியுள்ளார் கம்பர். கைகேயியால் அறம் மாறுபட்டவுடன் (ஆழி சூழ் உலகமெல்லாம் பரதனேயாள) இராமன் காட்டுக்குச் செல்கிறான்.

## எரியூட்டல் (தீ) (சிலம்பு - கம்பராமாயணம்)

கம்பராமாயணத்தில் இலங்கைக்கு அநுமன் தீ வைக்கிறான். குரங்கானது கொடியையும் பற்றி விதானத்தையும் கொளுத்திய தீயை

வீடணன் கற்புத்தியாகக் காண்கிறான். இங்கே தீயுடன் அறம் இணைக்கப்பட்டுள்ளது. இதே அறத்திற்காகச் சிலம்பில் மதுரையைக் கண்ணகி (தீயோரெல்லாம் கருகுக) எரியூட்டியதால் சிலம்பிலும் அறம் வெல்கிறது.

## மணிமேகலையில் சமூக அறம்

மனிதன் அறச் செயல்களைச் செய்து நன்னெறியில் வாழவேண்டும் என்பதை மணிமேகலை உணர்த்துகிறது. உலகில் உறையும் உயிர்களுக்கு எல்லாம் உணவும் உடையும் தங்குமிடமும் அளித்தலே அறம் எனக் கூறுகிறது மணிமேகலை. இதனை,

> அறம் எனப்படுவது யாது எனக் கேட்பின்
> மறவாது இது கேள் மண் உயிர்க்கெல்லாம்
> உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
> கண்டது இல் (மணிமேகலை 25 : 228 - 231)

என்பது அப்பாடல்,

மேலும்,

> பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட்டு இரங்கலும்
> இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
> மக்கள் யாக்கை இது என உணர்ந்து
> மிக்க நல் அறம் விரும்புதல் புரிந்தேன் (மணி : 18-136-139)

எனும் பாடலடிகளில், இளமை நீங்கும் அழகு சிதையும் உடல் அழியும் இன்பம் நிலையானது அல்ல : அறம் ஒன்றே அழியாதது எனும் உண்மையை உலகிற்கு உணர்த்தியுள்ளது.

மேலும் சமுதாயம் எதிர்நோக்கும் கொடுமைகளுள் மிகக் கொடுமையானது பசிப்பிணியாகும். கல்வி, நாணம், குடிமை, பெருமை ஆகிய அனைத்திற்கும் முன் பசித்தீ முந்தினால் மேற்கண்டவை யாவும் அழிந்தொழியும். இதனை,

> மண் டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
> உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (மணி : 11 : 95-96)

எனும் அடிகள் மணிமேகலைப் பசிப்பிணிப் போக்கும் அறச் செயலாகும்.

## வெற்றி வேற்கை கூறும் அறக்கருத்து

இந்நூல் சிறந்த உலகியல் அறங்களைத் தன்னுள் அடக்கியதாகக் கொண்டு விளங்குகின்றது. இதனை,

அறத்திரு பிச்சைக் கூவி இரப்போர்
அரசரோடு இருந்து அரசு ஆளனு மாறுவர் (பா - 52)
சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக் கூழ்ச் சாலை அடையினும் அடைவர் (பா - 51)

என்பது அப்பாடலடி. அன்ன சத்திரங்களுக்குப் போய் உணவு கேட்பவர்கள் உயர்ந்த பதவியும், செல்வமும் உள்ளவர்களும் ஒரு காலத்தில் தருமத்திற்கு அன்னமிடும் அன்னசத்திரத்திற்குப் போனாலும் போவார்கள். ஆதலால் உணவை உண்ணும் பொழுது பலரோடு பகிர்ந்து உண்ண வேண்டும் எனும் பல அறநெறிக் கருத்துக்களைக் கொண்டு விளங்குகிறது.

## சிலம்பில் அறம்

கணவனைப் பிரிந்த கண்ணகி பிரிவுக்காக வருந்தாமல் கணவனோடு இணைந்து அறநெறிகளை ஆற்ற முடியவில்லையே என வருத்தம் அடைகிறாள்.

இதனை,

அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர்ச் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை.....

அதாவது கற்புடைய மகளிர் அறவோர்க்குக் கொடுத்தலும் அந்தணர்களை ஆதரித்தலும் துறவிகளை எதிர் சென்று ஆதரித்தலும், விருந்தினரைப் போற்றுதலும் எனும் தலைசிறந்த அறங்களைக் கடைப்பிடித்தனர்.

## பிற அறப்பண்புகள்

உயிரினும் சிறந்தது மானம். மானம் இழப்பதிலும் உயிரைக் கொடுத்து மானத்தை நிலை நிறுத்துதல் வேண்டும். இவ் அறக்கருத்தினைச் சேரமான் கணைக்காலிரும்பொறையின் பாடல் புலப்படுத்துகிறது. பகைவர் சிறையிடத்துக் காவலர் நீர் தருவதற்குக் காலம் தாழ்த்தி நீர் கொண்டு வர,

அந்நீரைப் பருகாது மானங்காப்பதற்காக உயிர் நீத்தவன். கோப்பெருஞ்சோழன் தன் மக்கள் தன்னொடு ஏற்பட்ட அகப்புண்ணால் வடக்கிருந்து உயிர் துறந்தான். செய்ந்நன்றியறிதல், சிற்றினமின்மை, இன்முகமுடைமை ஆகிய நல்லற நெறிகளையுடையவனாக நல்லியக்கோடன் திகழ்ந்தான். இவ்வாறு அறப்பண்புகளுடன் மன்னர்கள் சிறந்து நின்றபான்மையைச் சங்க இலக்கியம் காட்டுகிறது.

## குறளில் அறம்

அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதுதான் இன்பம் என்பதை,

அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல். (குறள் - 39)

என வள்ளுவம் வகுக்கின்றது. அறமல்லாத வழிகளில் வருவது இன்பமே எனினும் தள்ளத்தக்கது. சமுதாயத்தை உயர்த்துதல் என்பதும் அறத்தின் நோக்கமாகும். ஒருவர் எல்லாருக்குமாக எல்லாரும் ஒருவருக்குமாக ஆற்ற வேண்டிய கடமைகளும் அறத்தில் அடங்கும். அவ்வாறு மனிதன் அறப்பண்புகளைச் சீர் தூக்கி கண்டறியப்பட கருவூலம், திருக்குறள், இதனுள் 133 அதிகாரத்தில் அன்புடைமை, அறிவுடைமை, அடக்கமுடைமை என 25 மை எனும் அதிகாரத்தில் முடிகிறது. இவை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியது. அடுத்து ஆமை என இன்னா செய்யாமை, அவையஞ்சாமை, கள்ளுண்ணாமை என 19 அதிகாரத்தில் செய்யத்தகாதவை என வள்ளுவர் அறிவுறுத்தியிருக்கிறார்.

## தொகுப்புரை

இது காறும் கண்ட செய்திகளை நோக்குமிடத்து இலக்கியங்களில் அறச் சிந்தனைகள் தொடர்பான நிலைப்பாட்டை அறிய முடிகிறது. ஒவ்வொருவரும் அறத்தன்மையைப் பேண வேண்டிய முறையை வலியுறுத்துகிறது. அவை காப்பியங்களின் கதைகள், நிகழ்ச்சிகள், நீதி இலக்கியங்கள் வழியாக உணர்த்தப்பட்டுள்ளன. இவ்வாறும் அறம், பிழையாமையைக் காட்டும் பாதுகாப்புப் பெட்டகமாகத் தமிழிலக்கியங்கள் விளங்குகின்றன.

# தேடல்

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

'தேடல்' எனும் உந்துசக்தி இருந்தா லன்றிச்
செம்மாந்த வெற்றிகளை அடைவ துண்டா?
நாடுவிட்டுக் காடுசென்ற 'சித்தார்த் தன்' தான்
ஞாலமதில் 'புத்தர்' என உயரக் கண்டோம்!
ஏடுகளைத் தேடிநிதம் பயின்றார் 'அண்ணா',
ஈடில்லா அறிஞர்என ஆனார்! ஆய்வை
நாடியிங்கே பாடுபட்ட 'எடிசன்' தானே
நானிலத்தை அறிவியலால் வியக்க வைத்தார்!

பதுமைகளாய் இல்லாமல் புதுமை காணப்
பல்வகையில் சிந்தனையை ஓட்ட வேண்டும்!
நதிகூட நடக்காமல் தேங்கி நின்றால்
நன்னீராய் இருப்பதுண்டா? இன்னும் இன்னும்
எதுவுமிங்கே 'விதி'ப்படிதான் நடக்கு மென்றே
எண்ணுவதை மிதித்திடுவோம்! மண்ணில் நல்ல
விதையூன்றத் தவறிவிட்டால் விளைச்சல் ஏது?
வெற்றிகளும் 'தேட'லின்றேல் விளைவ தேது?

நெடுந்தூரம் கடந்துவந்த வரலாற் றேட்டை
நீங்களிங்கே பாருங்கள்; கோள மீதில்
படுவேக வளர்ச்சியெலாம் வடிவெ டுக்கப்
பங்களித்தோர் மந்திரமே 'தேடல்' தானே!
'விடியாதா? விடியாதா?' என்றே ஏங்கி
வெறுங்கனவில் மிதப்பதனால் 'விடியல்' உண்டா?
கடிகார நொடிமுள்ளைப் போலே ஓடிக்
கருத்தான 'தேட'லினால் 'சரிதம்' காண்போம்!

# மீமாம்சையின் கடமைக் கோட்பாட்டின் பின்புலம்

முனைவர் பி.ஆர். நரசிம்மன்
மதுரை

இந்திய மெய்ப்பொருளியல் பிரிவுகளில் மீமாம்சையும் ஒன்று. வேதங்களின் மையப் பிரிவான பிராம்மணங்கள் என்னும் சடங்கியல் பிரிவை முதன்மையாகக் கருதுவது மீமாம்சை ஆகும். சடங்கியல் கடமைகளை விவரிக்கின்றது. எனவே கடமைகளை விவரிக்கும் மீமாம்சை கர்ம (கடமை) மீமாம்சை என்று அழைக்கப்படுகின்றது. வேதங்களில் கூறப்பட்டுள்ள கடமைகளை மீமாம்சை பொதுவான கடமைகள் (சாதாரண தர்மங்கள் அல்லது கடமைகள்), சிறப்பான கடமைகள் (விசேஷ தர்மங்கள்) என இருவகையாகப் பிரிக்கின்றது. பொதுவான கடமைகள் என மீமாம்சை பதிமூன்றினைக் குறிப்பிட்டு, அவற்றை அனைவரும் செய்ய வேண்டும் என்று கூறுகின்றது. சிறப்பான கடமைகளை விருப்பக் கடமைகள் (காம்ய கர்மங்கள்), உடல் தகுதியை அடிப்படையாகக் கொண்ட இனக் கடமைகள் (வர்ணதர்மங்கள்), வாழ்க்கை நிலையை அடிப்படையாகக் கொண்ட கடமைகள் (ஆசிரம தர்மங்கள்), அன்றாடம் இயற்ற வேண்டிய கடமைகள் (நித்ய கர்மங்கள்), ஏதேனும் ஒரு காரணத்தை முன்னிட்டுச் செய்ய வேண்டிய கடமைகள் (நைமித்திக கர்மங்கள்) எனப் பிரிக்கின்றது. இவை அனைவராலும் செய்யப்பட வேண்டியவை அல்ல. இவை அனைத்தும் சார்பு நிலைக் கடமைகள் ஆகும். இவற்றைத் தவிர மீமாம்சை வேதங்களில் தடுக்கப்பட்ட கடமைகளைப் (நிசித்த கர்மங்கள்) பற்றியும் கூறுவதாகச் சொல்கின்றனர். வேதங்களில் கூறப்பட்டுள்ள கடமைகளை மீமாம்சை வேதக் கட்டளைகள் (விதி வாக்கியங்கள்) எனக் கூறுகின்றது. அக்கடமைகளை இயற்றும் பொழுது கடமை கடமைக்காகவே என்ற உணர்வுடன் இயற்ற வேண்டும் என்றும் மீமாம்சை வலியுறுத்துகின்றது.

கடமைகளைத் தனது மெய்ப் பொருளியலில் முதன்மையாகக் கருதும் மீமாம்சை அவற்றை இயற்ற வேண்டியதன் இன்றியமையாத் தன்மையை தனது அறயியல் பகுதியில் விவரிக்கின்றது. மீமாம்சையின் அறயியல் கடமைகளையும், அவற்றை இயற்ற வேண்டியதன் இன்றியமையா நிலையையும், அவற்றை இயற்ற வேண்டிய பான்மையையும் விளக்குவதுடன் நில்லாது இவற்றின் பின்புலத்தையும் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

மீமாம்சகர்கள் கடமைகளுக்குரிய பின்புலத்தை வேதச் சொற்களை அறிவியல் முறையில் ஆய்வு செய்வதன் வழி விளக்குகின்றனர். இதற்கென அவர்கள் முதலில் ஆய்வுக்கு உட்படுத்துவது ஞானம் மற்றும் விஞ்ஞானம் என்ற இரண்டு சொற்கள் ஆகும். ஞானம் என்ற சொல் தமிழில் அறிவு எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. ஆனால் இந்திய மெய்ப் பொருளியலில் இச்சொல் பொருள்களைப் பற்றிய அறிவைக் குறிக்காது. மெய்ப் பொருளியலில் அது முற்றறிவைக் குறிப்பிடும். முடிநிலையான பரம்பொருளைப் பற்றிய அறிவே ஞானம் ஆகும். இதனை இன்னும் சற்று விளக்கும் பொழுது எந்த ஒன்றினை அறிவதால் அனைத்தையும் அறிவதாக அமையுமோ, அந்த முடிநிலையான, எவ்விதச் சார்புமற்ற உண்மைப் பொருளை அறிவதே ஞானம் ஆகும். ஏனைய அனைத்தும் சார்புநிலை அறிவே ஆகும்.

இதே போன்று விஞ்ஞானம் என்ற சொல் தமிழில் அறிவியல் எனப்படுகிறது. படைப்பு முழுமையின் (பிரபஞ்சம்) ஏதாவது ஒரு பிரிவைப் பற்றிய முழுமையான, சரியான, துல்லியமான அறிவே அறிவியல் என வரையறுக்கப்படுகின்றது. ஆனால் இச்சொல் இந்திய மெய்ப் பொருளியலில் வேறு விதமாகப் பொருள் கொள்ளப்படுகின்றது. விஞ்ஞானம் என்ற சொல் இரு பிரிவுகள் கொண்டது. அவை வி. ஞானம் ஆகும். இவற்றுள் வி எனும் பகுதி மூன்று பொருள்களைத் தரும். அவை சிறப்பானது (விசேஷம்), பன்மையியலானது (விவிதம்), எதிர்மறையானது (விரோதம்) ஆகும். இவற்றுள் விஞ்ஞானத்திற்கு எதிர்மறையான என்ற பொருளை எடுத்துக் கொண்டால் முரண்பாடாகி விடும். அது ஏற்கத்தக்கதல்ல. ஏனைய இரண்டு பொருள்களை எடுத்துக் கொள்ளும் பொழுது சிறப்பான, பன்மையியலான அறிவே விஞ்ஞானம் எனப் பொருள்படும். எனவே விஞ்ஞானம் இந்திய மெய்ப்பொருளியலின் படி சிறப்பான, பன்மையிலான பொருள்களைக் கருதும் அறிவாகும்.

ஞானம் என்ற முற்றறிவு பரம்பொருளை அறிவதாகும். பரம்பொருள் நிலையானது, மாற்றமில்லாதது, கடந்தும், உள்நிலையிலும் உள்ளது. விஞ்ஞானம் என்பது படைப்பு முழுமையை அதன் சிறப்பில்புகளுடனும், அதன் பன்மையான நிலைகளிலும் அறிவது. படைப்பு முழுமையின் சிறப்பான இயல்புகள் என்பது நிலையற்றது, மாற்றத்திற்குட்பட்டது, கடந்த நிலையற்றதாகும். படைப்பு முழுமை நிலையற்றது என்னும் பொழுது அது என்றும் மாறிக் கொண்டே இருக்கின்றது. தோன்றி, அழிந்து கொண்டே

இருக்கின்றது என்பதாகும். சுருங்கக் கூறின் படைப்பு முழுமையானது இயக்க நிலையில், செயல் நிலையில் அல்லது ஆற்றல் நிலையில் உள்ளதாகும். இதனை விளக்குவதற்கு மீமாம்சகர்கள் இருதயம் என்ற சொல்லினை எடுத்துக்காட்டாக ஆய்வுக்கு உட்படுத்துகின்றனர். இருதயம் என்ற சொல்லை அவர்கள் இரு, த, யம் எனப் பிரிக்கின்றனர். இவற்றுள் இரு என்பதன் வேர்ச்சொல் இரின் ஹரனே என்பதாகும். இதன் பொருள் உள்ளிழுத்தல் என்பதாகும். த என்பதன் வேர்ச்சொல் த அவகண்டனே என்பதாகும். இதன் பொருள் வெளியிடுதல் என்பதாகும். யம் என்பதன் பொருள் உள்ளிழுத்தல், வெளியிடுதல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதாகும் அல்லது அவை இரண்டும் கூடுமிடமாகும். இவ்விளக்கத்தின்படி, இருதயம் என்ற உறுப்பு உள்ளிழுத்தல், வெளியிடுதல், கட்டுப்படுத்துதல் என்னும் மூவகை இயக்கங்களை ஆற்றுவது ஆகும். இருதயம் இம்மூவகை மாறுபாடுகளின், இயக்கங்களின், செயல்பாடுகளின் கூட்டு ஆகும். இம்மூவகை மாற்றங்களைப் பிராம்மண இலக்கியங்கள் இயற்கையில் நிகழும் மூவகை மாற்றங்களான ஆகதி, கதி, ஸ்திதி எனக் குறிப்பிடுகின்றன. ஆகதி என்பது உள்ளிழுப்பது, கதி என்பது வெளியிடுவது, ஸ்திதி என்பது கட்டுப்படுத்துவது அல்லது நிலை நிறுத்துவது ஆகும். இம்மூன்றும் இயக்கங்கள் அல்லது ஆற்றல்களே ஆகும். இருதயத்தைப் போன்ற படைப்பு முழுமையில் உள்ள அனைத்துப் பொருட்களும் அவை உயிருள்ளவையாயினும், உயிரற்றவை ஆயினும் இம்மூவகை ஆற்றல்களாக இயக்கங்களாகவே உள்ளன. எனவே பன்மையிலான படைப்பு முழுமையின் சிறப்பான ஆற்றல் நிலைகளை அறிவதே இந்திய மெய்ப் பொருளியலின்படி விஞ்ஞானம் அல்லது அறிவியல் ஆகும்.

இருதயம் உள்ளிழுத்தல், வெளியிடுதல் ஆகிய இயக்கங்களின் மைய ஆற்றல். இதே போன்று படைப்பு முழுமையிலுள்ள ஒவ்வொரு பொருளிலும் மைய ஆற்றல் உண்டு. இந்த மைய ஆற்றலைப் பொறுத்தே பொருளின் படைப்பும், அழிவும் அமையும். இந்த மைய ஆற்றல் இரிச்சக்தி எனப்படுகிறது. பொருள்களின் மைய ஆற்றல் இரிச்சக்தி எனப்படுவது போன்று படைப்பு முழுமையின் மைய ஆற்றலை யசுர் வேதம் பிரஜாபதி எனக் குறிப்பிடுகின்றது. ஆற்றல்களின் ஆற்றல் என்பதே இதன் பொருளாகும். படைப்பு முழுமையின் மைய ஆற்றலை ஆட்சார்புடையதாகக் கருதும் பொழுது அது இறைவன் எனப்படுகிறது. இம்மைய ஆற்றலின் மூவகை இயக்கங்களை ஆட்சார்புடைய இறைவர்களாகக் கருதும் பொழுது அவர்கள் விஷ்ணு, ருத்ரன், பிரம்மா எனப்படுகின்றனர். ஒரு பொருள் இருப்பது என்பது, அதன் உள்ளிழுத்தல்

ஆற்றலாலேயே ஆகும். எனவே பொருள்களின் இருப்பின் இறைவனாக விஷ்ணு உள்ளார். ஒரு பொருளின் அழிவு என்பது வெளியிடுதல் ஆற்றலால் என்பதால், பொருள்களின் அழிவுக்குரிய இறைவனாக ருத்ரன் கருதப்படுகிறார். மேற்கூறிய ஆற்றல்களைக் கட்டுப்படுத்துபவர் என்பதால் பிரம்மா படைப்பவனாக உள்ளார். படைப்பு முழுமையின் மைய ஆற்றலான பிரஜாபதியின் மூவகை ஆற்றல்களின் உருவகமாகவே விஷ்ணு, ருத்ரன், பிரம்மா உள்ளனர். இக்கருத்தை உணராத மேல்நாட்டினர் இந்திய மெய்ப் பொருளியலின்படி கடவுட் கோட்பாடு பல கடவுட் கோட்பாடு எனத் தவறாக விளக்குகின்றனர்.

மேற்கூறியவற்றிலிருந்து அறியப்படுவது யாதெனில், படைப்பு முழுமையின் அனைத்துப் பொருட்களும் புலப்படாத மற்றும் அழிக்க முடியாத இரிச் சக்தியின் மூவகை ஆற்றல்களின் வடிவமாகவே உள்ளன என்பதாம். இம்மூன்று ஆற்றல்களும் தனித்தனியானவை அல்ல. அவை ஒரே ஆற்றலின் மூன்று நிலைகளே ஆகும். மனிதன் உயிரும், புத்தி, மனம், உடல், புலன்கள் சேர்ந்த கூட்டு ஆகும். உயிர், உயிரல்லாத புத்தி, மனம், உடல், புலன்கள் ஆகியவற்றுடன் இணைந்திருப்பது நிலையானதல்ல, தற்காலிகமானதே, இவ்விணைப்பு உயிர் தன் உண்மையான ஆன்மீக இயல்பை உணருகின்ற வரையில் தொடரும். உயிர் தன்னை உணர்ந்தால், இவ்விணைப்பு துண்டிக்கப்பட்டு விடும். உயிர் தன்னை உணர்தலே அனைத்து மெய்ப் பொருளியல் கோட்பாடுகளின் உயரிய நோக்கமாகும். மனிதன் படைப்பு முழுமையின் ஒரு சிறு புள்ளியே ஆகும். படைப்பு முழுமையின் ஒரு உறுப்பாக இருக்கின்ற வரையில் அவன் அவனுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டே தனது வீடுபேற்று நோக்கத்தைப் பெற வேண்டும். வேதங்கள் மனிதனுக்குரிய நலன்களை இருவகையாகக் குறிப்பிடுகின்றது. அவை நிஷ்ரேயசம், அப்யூதயம் ஆகும். முன்னது மனிதனது ஆன்மீக நலன், பின்னது சமூக பொருளியல் நலன். ஆன்மீக நலன் மனிதன் தனது ஆன்மீக இயல்பை உணர்தலைக் குறிக்கும். சமூக பொருளியல் நலன் என்பது படைப்பு முழுமையின் ஒரு உறுப்பான மனிதன் தான் சார்ந்துள்ள சமூகம் மற்றும் பொருளியில் துறைகளில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் காண்பதைக் குறிக்கும். மெய்ப் பொருளியல் ஒருமைவாதிகள் உயிரின் ஆன்மீக நலனான தன்னை உணர்தலை மட்டுமே கருதுவர். அதன் வழிமுறைகளான கேட்டல் (சிரவணம்), மனதில் நிலைநிறுத்தல் (மனனம்), முனைப்புடன் எண்ணியபடி இருத்தல் (நித்யாசனம்) ஆகியவைகளை விளக்கிச் செல்வர். ஆனால் மீமாம்சகர்கள், மனிதன் ஒரு உயிர் உடல் கலப்பாக உள்ளவரை வெறும் ஆன்மீக நலனை மட்டும் கருதாது,

அவனுடைய சமூக பொருளியல் நலனுக்கு இன்றியமையாத் தன்மையை அளிப்பதுடன் சமூகப் பொருளியல் நலன் இயல்பாகவே ஆன்மீக நலனை அடைய வைக்கும் என்று கூறுகின்றனர். பின்னதை அடையவே அவர்கள் கர்மங்களை வலியுறுத்துகின்றனர்.

மனிதனுக்குரிய நலன்களை விளக்குகின்ற வகையில் மீமாம்சகர்கள் வேதங்களில் கூறப்பட்டுள்ள படிநிலை வளர்ச்சிகளை (பரிணாமம்) விவரிக்கின்றனர். படைப்பு முழுமையானது அதன் மைய ஆற்றலான பிரகிருதியிலிருந்து வெளிப்படுவது. பிரஜாபதி தன் இயல்பாகத் தானே இருப்பது. இதன் பொருள் அது தன் இருப்பிற்கோ, அறிவிற்கோ, செயல்பாட்டிற்கோ பிறதொன்றினைச் சாராது தன்னையே சார்ந்து இருப்பதாகும். இதனைச் சுயம்பு என்பர். சுயம்பு பிரஜாபதியைச் சுற்றி எண்ணற்ற விண்மீன் கூட்டம் சுழன்று கொண்டே உள்ளது. ஒவ்வொரு விண்மீன் கூட்டத்திற்கும் ஒரு மைய ஆற்றல் உண்டு. இதனைப் பரமேஸ்தீ என்கின்றனர். ஒவ்வொரு பரமேஸ்தியைச் சுற்றிலும் எண்ணற்ற சூரியக் குடும்பங்கள் சுழன்று கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு சூரியக் குடும்பத்திற்கும் சூரியன் மைய ஆற்றலாக உள்ளது. ஒவ்வொரு சூரியனைச் சுற்றிலும் எண்ணற்ற கோள்கள் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இவற்றுள் ஒன்றே பூமியாகும். பூமியும் சந்திரனுடையை உட்கருவாக விளங்குகின்றது. சந்திரன் பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கின்றது.

மனிதன் ஒரு படைப்பு முழுமை, தனித்த நிலையில் வெளிப்படாத புருஷன். (அவ்யாய புருஷன்) தனி ஆன்மாவின் மையமாக உள்ளது. படைப்பு முழுமையுடன் ஒப்பிடுகையில் இது ஸ்வயம்பு பிரஜாபதியைப் பிரதிபலிக்கின்றது. இதனை அடுத்து பெரிய ஆன்மா அல்லது மஹான் ஆத்மா உள்ளது. இது பரம்பரை உயிர் ஆகும். இது ஏழு பரம்பரையாக பெறப்படுது மட்டுமின்றி வருகின்ற ஏழு பரம்பரைகளுக்கும் கொண்டு செல்லப்படுவது. இது படைப்பு முழுமையிலுள்ள பரமேஸ்தியை ஒத்தது. புத்தி என்னும் பிரித்தறியும் அறிவு சூரியனையும், கருதுகின்ற மனம் சந்திரனையும், உடல் பூமியையும் சார்ந்த பகுதிகளாகும். இவ்வாறு மனிதன் முழுமையான ஒரு நுண்ணிய படைப்பு முழுமையாக விளங்குவதால் மனிதன் தான் சார்ந்துள்ள இயக்க நிலையிலுள்ளதும், பன்மையியலானதுமான படைப்பு முழுமையுடன் இயக்க அல்லது செயல் நிலையிலேயே உறவு கொள்ள வேண்டி உள்ளதாலேயே மீமாம்சகர்கள் செயல்களுக்கு இன்றியமையாத் தன்மையை அளிக்கின்றனர்.

மேற்கூறியவற்றிலிருந்து படைப்பு முழுமையானாலும் தனிமனிதன் ஆயினும் சரி, இரண்டுமே அடிப்படையில் ஒரே மாதிரியான ஆன்மீக இயல்பையும், புறநிலையில் இயக்க நிலைகளில் உள்ளவற்றையும் பெற்றிருக்கின்றன. எனவே தான் மீமாம்சகர்கள் மனித நலனில் ஆன்மீகத்தையும், சமூகப் பொருளியல் நலனையும் இணைத்துப் பேசுகின்றனர். ஆன்மீக நலனை அக உணர்வின் வழி அடையலாம். சமூகப் பொருளியல் நலனைச் செயல்களைச் செய்வதன் வழியே அடைய முடியும். ஒருமைவாதிகள் சமூகப் பொருளியல் நலனை ஒதுக்கி விடுகின்றனர். ஆனால் மீமாம்சகர்கள் இரண்டையும் ஏற்பதுடன் மனிதன் ஒரு நுண்ணிய படைப்பு முழுமை என்பதால், படைப்பு முழுமை இயக்கங்களால் ஆனது என்பதால் நுண்ணிய படைப்பு முழுமையான மனிதனும் இயக்கங்களின், கர்மங்களின் வழியில் மட்டுமே முன்னதுடன் தொடர்பு கொள்ள முடியும் என்கின்றனர். இக்கருத்தே மீமாம்சகர்களின் கர்மக் கோட்பாட்டின் பின்புலம் என்பதை அறியலாம்.

மீமாம்சகர்கள் இறுதியாக நடத்தை பன்முகமாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். ஆன்மாக்கள் அனைத்தும் ஒத்த இயல்பை உடையன. எனவே ஆன்மாவைக் கருதும் பொழுது அதன் ஒத்த இயல்பைச் சமமாக, இணையாகக் காண வேண்டும். இதனை சமதர்சனம் என்பர். படைப்பு முழுமை பன்மையானதாகவும், இயக்க இயல்பு கொண்டதாகவும் இருப்பதால் அதனுடன் மனிதன் கொள்கின்ற நடத்தையும் பன்மையானதாக இருக்க வேண்டும். நடத்தையை வர்த்தன என்பர். பன்முக, பல்வேறுபட்ட அல்லது இணையற்ற நடத்தையை விசமவர்த்தனம் என்பர். மீமாம்சகர்கள் விசம வர்த்தனத்தை வலியுத்துகின்றனர். எனவேதான் பல்வேறு வகைப்பட்ட கர்மங்களை, செயல்களை, வேதங்களிலிருந்து தொகுத்தளித்து, அவற்றைச் செய்வதன் வழியே சமூகப் பொருளியல் நலனைப் பெற முடியும் என்று வலியுறுத்துகின்றனர். இதற்கு மேலும் கூறுகையில் கர்மங்களை முறையே செய்வதால், அவையே இயல்பாக ஆன்மீக நலனுக்கும் இட்டுச் செல்லும் என்று கூறுகின்றனர். சமதர்சனத்தை விசமதர்சனமாகக் காண்டலும், விசமவர்த்தனத்தை சமவர்த்தனமாக இயற்றுவதும் விபரீதமான விளைவுகளை உண்டாக்கும் என்றும் கூறுகின்றனர் மீமாம்சகர்கள்.

# இயற்கைக் காட்சியும் இறைவன் மாட்சியும் !

புலவர் சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

இயற்கைக் காட்சிகளின் அழகே அழகு ! நேரில் கண்டு மகிழத் தொடங்கின், நேரம் போவதே தெரியாது ! வண்ணப்படமாக்கி வைத்துக் கொண்டாலோ, வாடா நினைவுமலராக வண்ணம் விரிக்கும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, இயற்கைக் காட்சிகள் மாந்தர் மனத்தைக் கொள்ளை கொண்டு, தமக்கென அரியாசனமிட்டு அமர்ந்து கொண்டமைக்குப் பாடல்களில் கொட்டிக் கிடக்கும் இயற்கைக் காட்சிகளே சான்றாம்.

பத்துத் திசைகளிலும் ஐந்து பொருள்களிலும் (ஐம்பூதம்) இரவிலும் பகலிலும், நினைவில் நிற்கும் நிசக்காட்சிகளில் மட்டுமன்றி, வழுக்கியோடும் கனவுக் காட்சிகளிலும் இயற்கையழகு கண் சிமிட்டிக் கதையளக்கும். ஐவகை நிலங்களிலும், ஆறு பருவங்களிலும், ஆறு சிறு பொழுதுகளிலும் அபிநயங்கள் மாறும் ; காணவும் திகட்டா ; காட்சிப்படம் பிடித்துவைத்துக் கொண்டுள்ள பாடல்வழி அறியவும் சோர்வில்லா ஆர்வம் துணைவந்து நிற்கும். உண்மைக் காட்சி, உருவக் காட்சி, உவமைக் காட்சி, கற்பனைக் காட்சி எனப் படிகள் பரவும் ! இம்மரபில் திளைத்த இளம்பெண், நதியின் குளிரோட்டத்தில் ஒன்றி வியந்து, தன் கற்பனையையும் கவிதையாக்கித் தமிழ் நதியில் கலந்து மணம் கூட்டுகிறாள் இப்படி :

ஓடுகிற தண்ணியிலே
　　ஒரசிவிட்டேன் சந்தனத்த,
சேந்துச்சோ சேரலையோ
　　செவத்தமச்சான் நெத்தியிலே.....

இச்சையோடு அவள் இயற்கைக் காட்சியில் தோய்ந்து, கொச்சைத் தமிழில் பாடிய வரிகள், பின்னர் இசை மகுடம் சூடி எத்திக்கும் உவப்பூட்டின. மேலும், கவிஞர் போர்த்திய பொன்னாடை ஏற்று, அழகு மிளிர்ந்தன !

நெல்நாற்று கைநட, இயற்கையழகு, நாச்சிலந்தி ஒலி நூல் வலைப் பாவில் வீழும் செவி ! செந்தமிழ் அழகு மிக்குச் செழித்த இலக்கியங்களில்

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் திளைத்துக் கிளைத்த மரபு வழி வந்த இயற்கை உயிர்ப்புதான், கொச்சைச் சொல்கூட்டு எனும் உடம்பேந்திப் பிறந்த எழுதாக் கவிதைகளாகி, எண்திசையும் வலம் வந்தனவோ? அல்லது, முத்தமிழில் இரண்டாம் தமிழுக்குத் தண்டுரம் சேர்க்கத் தமிழ் மண்ணில் கால் கொண்ட சல்லிவேர்கள் நிகர் பிறந்த வடிவங்களோ? யாதென வியக்கலாம்?

இயற்கைக் காட்சிகள், அழகுணர்ச்சியூட்டி, மகிழ்விக்கும் எல்லையில் மட்டுமா நிற்கின்றன? மனிதர் விடியலில் வெள்ளிப் பார்த்தோ, கொக்கறுத்த கோவை நினைவூட்டும் சேவல் சொல் கேட்டோ, தான் தூங்க இடமளித்த தண்ணிழல் மரத்தைப் புகழ்ந்து தேனை ஒலியாக்கிக் குளிர்விடியல் தென்றலில் பரப்புகின்ற குயிலின் கூவலைக் கேட்டோ, விடியலில் விழித்தெழுந்து, தத்தம் தொழில்களைத் தொடங்கவும், தொடரவும் துணையாகி நிற்கின்ற அதிசயத்தையும் அல்லவோ அவை நிகழ்த்துகின்றன? எவ்வாறு? பாவேந்தர்பா :

(கதிரவன்)

நலம் செய்தான் ஒளிமுகத்தைக் காட்டிவிட்டான்; காட்டி,
நடத்துகின்றான் தூக்கமதில் ஆழ்ந்திருந்த உலகை!
ஒளிசெய்தான் கதிர்க்கோமான் வானகத்தில், மண்ணில்!
உயர்மலைகள், சோலை, நதி, இயற்கை எழில்கள் பார்!
களிசெய்தான் பெருமக்கள் உள்ளத்தில் அதனால்,
கவிதைகள், கைத்தொழில்கள், என்னென்ன ஆக்கம்!
விலகிற்றுக் காரிருள்தான் பறந்ததுபார் அயர்வு!
விண்ணிலெல்லாம் பொன்னொளியை ஏற்றுகின்றான், அடடா!

பாவேந்தர் வியப்பு உண்மையே என்பதைச் –

செவிவழிச் செய்தி ஒன்றும் தெரிவிக்கும் :

கம்பரை வியக்கவைத்த ஏற்றப்பாட்டு!

முதல்நாள் புலரா விடியல் :

1) ஏற்றம் இறைப்பவர் –

"மூங்கில் இலை மேலே....."

2) சால் பிடிப்பவர் –

"........... தூங்கும் பனிநீரே...."

இரண்டாம் நாள் இளங்காலை ; கதிர் பொன்னொளி தருவேளை :

1. மூங்கில் இலை மேலே......

2. ........... தூங்கும் பனிநீரே......

1. தூங்கும் பனி நீரை......

2. ........... வாங்கும் கதிரோனே ! சுற்றமுடன் செழித்து வளரும் மூங்கில், பனிபடர் இலைகள், குளுமை, விடியல், காலை, எழுகதிர்ப் பொன்னொளி, பயிருக்கு நீர் பாய்ச்சும் உழவர் பணி காட்டும் மணிப்பா ! ஏட்டில், எழுத்தாணி அசைத்து சீர்கொண்டு தொடை நயம் மிளிரும் பாபுனை தொழில் பாவலர் அல்லர் இவ்விருவர். எனினும், தம் தொழிலை இயற்றிய வண்ணம், காற்றேட்டில் ஒலிப்பாவைப் பதித்து வைத்தனர் ! எளிய சொற்கள் ! சந்தம், துள்ளல் நடை பயிலும் ! எதுகைக்கோ, குறைவிலா வளவாழ்வே : மூங்கில் – தூங்கும் – வாங்கும் ! இப்பாடலுக்கு, இயற்கை அன்னை, இயல்பு நவிற்சியணி என்னும் பொன்னாடையைத் தமிழன்னை வழி தந்தணிவித்துப் பெருமை செய்தனளன்றோ? அறிவியல் உண்மை என்னும் சந்தனத்தையும் பூசிக் கொண்ட இவ்வரிகளின் அகவை, ஆயிரம் என்றால், நம்பத்தான் முடிகிறதா? நம்பினால் நம்புங்கள் ! எழுதாக் கவிதைகள் ஏராளம் ! படகு ஓட்டுவோர், வண்டிக்காரர், ஏர் உழவர், கமலை ஓட்டுவோர், களை பறிப்போர், நெல் குற்றுநர் நா வழி, பா பல !

## பலவகை இயற்கைக் காட்சிகள்

### மேகம் ; மாமழை

"மின்னி மேகம் பரவுது

மெல்ல மெல்லத் துளிக்குது....

வானம் கறுத்தால் மழை பெய்யும்

மழைபெய்தால் மண்குளிரும்

மண்குளிர்ந்தால் புல்தழைக்கும்...." – கவிமணி (மலரும் மாலையும்)

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று.
நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்" - திருவள்ளுவர்
(எழிலி = அழகுமேகம்) (நீர்கொள், கார் மேகம்!)

"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற்கு அவன்அளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்!" - இளங்கோவடிகள்

"..... கொட்டி இடிக்குது மேகம்......
எட்டுத் திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா, தம்பி வீரா!
...... தெய்வீகக் காட்சியைக் கண்முன்பு கண்டோம்!....."
- மகாகவி பாரதியார்

".... ஏரி குளங்கள் வழியும்படி...... பூவும் காயும்
மரமும் தழையும் நனைந்திடும் படி......
மழையே மழையே வா வா!" - பாவேந்தர்

## அருவி

"...... அருவியெலாம் தென்பாங்கு பாடுகின்ற பொதிகை
அசைதென்றல் குளிர்வீசும் சந்தனச் சோலை ...." - பாவேந்தர்
"..... தழங்கருவி வேய்முற்றி முத்துதிரும்...." - பழமொழி நானூறு

## சிற்றோடை

"...... மான்சேர மயில்ஆடக் குயில்பாட மலர்கள்
தேன்சேர மகரந்தம் திசைதோறும் சிதற
மீன்சேரும் சிற்றோடை மெல்லோசை தவழும்
பூஞ்சோலை அதிலுற்றுப் புளகித்து மகிழ்வோம்!
- நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்

### மலை

திருமாலின் மார்பிலே விளங்கும் ஆரம் போன்று பெரிய மலை அழகுறத் திகழ்ந்தது :

"நெடியோன் மார்பில் ஆரம் போன்று
பெருமலை...." – சிலப்பதிகாரம் ; வஞ்சி., காட்சி......

"அருவி, மலை, மரங்கள் அத்தனையும் பொன்னின்
மெருகுபடுத்தி விரிகதிரோன் வந்தான் !" – பாரதிதாசனார்

### மலையோசை

உயிரினங்கள் எழுப்பும் பல்வேறு மலையோசைகள் பதிவு செய்யப்பட்டுள்ள பாடல்களின் ஓர் எடுத்துக்காட்டாக இளங்கோவடிகளின் பாடல் திகழ்கின்றது :

"குன்றக் குரவையொடு கொடிச்சியர் பாடலும்
வென்றிச் செவ்வேள் வேலன் பாணியும்
தினைக்குறு வள்ளையும் புனத்தெழு விளியும்
நறக்கண் ணுடைத்த குறவர் ஓதையும்
பறையிசை அருவிப் பயங்கெழும் ஓதையும்
புலியொடு பொரூஉம் புகர்முக ஓதையும்
கலிகெழு மீமிசைச் சேணோன் ஓதையும்
பயம்பில்வீழ் யானைப் பாகர் ஓதையும்
இயங்குபடை அரவமோடு யாங்கணும் ஒலிப்ப...."

### மலையில் வாழ்வோர் பெற்ற இயற்கை வளங்கள்

மலைப்பூட்டும் உயரமும், அகலமும், இயற்கை வளங்களும் தன்னிடம் கொண்டு, கோடையிலும் சுரந்தளிக்கும் ஊற்றுநீரும், நீர்ச்சுனைகளும், கல்குகைகளும், மரவளமும், பல்லுயிர்ப் பெருக்கமும், மஞ்சுகொஞ்சு முகடும் கொண்டு, செம்மாந்து சீர் அடுக்குப் பாவிலும் வான்தோய மீநிற்பது மலை ! (அதனால்) மலையின் மாட்சிமை விளங்க, நன்னூற்பா நவின்றார் பவணந்தியார் :

அளக்க லாகா அளவும் பொருளும்

துளக்க லாகா நிலையும் தோற்றமும்

வரப்பினும் வளம்தரும் வண்மையும் மலைக்கே !

இப்பாடல், இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் காட்சிக் காதையில், மக்கள் கொண்டுவந்த காணிக்கைப் பொருள்கள் குறித்த பாடல் அடிகளை நினைவூட்டுகின்றது. ஏனெனில், அப்பாடல் குறிக்கும் பொருட்களில் பலவகை, மலையில் கிடைப்பன. அப்பாடல் அடிகள் :

".....யானை வெண்கோடும் அகிலின் குப்பையும்

மான்மயிர்க் கவரியும் மதுவின் குடங்களும்

சந்தனக் குறையும் சிந்துரக் கட்டியும்

அஞ்சனத் திரளும் அணிஅரி தாரமும்

ஏல வல்லியும் இருங்கறி வல்லியும்

கூவை நூறும் கொழுங்கொடிக் கவலையும்

தெங்கின் பழனும் தேமாங் கனியும்

பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்

காயமும் கரும்பும் பூமலி கொடியும்

கொழுந்தாள் கமுகின் செழுங்குலைத் தாரும்

பெருங்குலை வாழையின் இருங்கனித் தாரும்

ஆளியின் அணங்கும் அரியின் குருளையும்......

..... பீலி மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும்

கானக் கோழியும் தேன்மொழிக் கிள்ளையும்

மலைமிசை மாக்கள் தலைமிசைக் கொண்டாங்கு....

இமயத்தில் வில் கொடியைப் பொறித்த சேரர்குடியில் தோன்றிய சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணச் சென்று பேரியாற்றங்கரையில், சுற்றமும் சேனையும் சூழத் தங்கியிருந்தபோது, காணவந்த மலைக்குறவர்கள் கொண்டுவந்த காணிக்கைப் பொருள்களின் பெரும் பகுதி, மேல் பாடல் பகுதிகளில் உள. இவற்றுள் பெரும்பான்மை மலைவளக் கொடை அன்றோ ?

குறவஞ்சி எடுத்துரைக்கும் மலைவளமும் எண்ண எண்ண இனிக்கும் எழுத்தோவியமாகவே இருக்கும். மலைக்காட்சியை வரைந்து காட்டும் சித்திரவரி :

"தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்

செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்...."

என்னே உயர்வு நவிற்சிக் கற்பனை! அருவிகளின் தொகுதியை அடைகாத்துக் கொண்டிருக்கும் மலையழகைக் கண்டோர் நினைந்து வியக்கவும், பிறர் சென்று சாரல் நனைந்து மகிழவும் தூண்டுகின்ற, மாணிக்க மணி வரிகள் ! திருக்குற்றாலத்தை மட்டுமன்றி, திற்பரப்பு, ஆழியாறு குரங்கருவி, கோவை குற்றாலம், வைதேகி, வெள்ளியருவி, ஒகேனகல் எனப் பட்டியல் பரவசப்படுத்தும் வண்ணம் மனம் விரிக்கும் ; ஏலகிரி சலகம் பாறை, திருமூர்த்தி அருவி, திருவேங்கட மலை, ஆகாயகங்கை, பாபவிநாசனம் அருவிகளை நினைவூட்டும்!

## அருவிக்கொடை

மலையருவி, மலைக்கு அமைந்த முத்துமாலை, பழமுதிர்ச்சோலை மலை அருவி திருமுருகாற்றுப்படையில் பாட்டாகப் பரிணமித்துப் புகழ்வென்றது ! பல அருவிகள் ஒன்றுசேரும் காட்சி, பல வண்ணத்துகில் கொடிகள் ஓரிடத்தில் சேர்ந்து அசைதல் போன்ற அழகு ! சந்தனம், அகில், மூங்கில், தேன், பலாக்கனி, சுரபுன்னை மலர்களை அள்ளிவந்து, கருங்குரங்கு கலை நடுங்க, பிடி குளிரினால் நடுங்க ஆற்றலுடன் வீசுகிறது அருவி! இதுமட்டுமா ?

அருவி, விலைமதிப்பு மிக்க பலபொருள்களைக் கொண்டுவந்து சொரியும்! அவையாவன :

யானையின் முத்துத் தந்தங்கள், பொன்தூள், வாழை, இளநீர், மிளகு மற்றும் இனமான பொருள்கள்! மலையின் உச்சியினின்றும், இழும் என்னும் ஓசை உண்டாகக் குதிக்கும் அருவி ! காட்டில் வாழ் உயிரினங்கள் அருவி வருகையால் என்ன செய்கின்றன என்பதையும் இப்பகுதி விவரிக்கின்றது.

திருமுருகு... 295 முதல் 315 வரையுள்ள பாடல் அடிகளைப் படித்தால், மேல் இயற்கைக் காட்சிகளைப் பாடல் மரபில் பரபரப்பாய் நிகழல் கண்டுவக்கலாம்!

## ஆறு

ஊடும்பாவுமாய் இயற்கைக் காட்சிகள் பின்னிக் கிடக்கும். நாமக்கல் கவிஞர் பா :

"நீரின்றி மக்கள் நிலையுமுண்டோ? அந்த
நீரைத்தருவதும் ஆறல்லவோ?
ஆறென்ற நீருக்கும் மேகங்கள் ஆதாரம் ;
ஆகாயம் மேகத்துக் காதரவு....
அன்னம் அளிப்பவள் காவேரி நல்ல
ஆடை கொடுப்பவள் காவேரி...."

பட்டினப் பாலையின் தொடக்கமாகக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் வைத்த காவிரிக் காட்சி :

"வசைஇல் புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்குஏகினும்
தற்பாடிய தளிஉணவின்
புள்தேம்பப் புயல்மாறி
வான்பொய்ப்பினும் தான்பொய்யா,
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்....."

ஆறுபற்றிக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை :

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன் – அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன் ;
ஆயும் மலர்பொழில் செய்து வந்தேன் – அங்கென்
ஆசை தீரவிளை யாடி வந்தேன் !

பொங்கும் புதுப்புனல் :

உழவர் ஓத மதகோதை
உடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி... – சிலம்பு

வையைப்புனல்

மலையில் மாலையில் அடைமழை பெய்து, காலையில், வையையில் புனல் பெருக, அவ்வெள்ளநீர் மலர்கள் போர்த்து, மாந்தளிர் மற்றும் வாழை இலைசேர, வறண்ட மணல் மூடிப் பரவி விரைந்து கடலை அடையப் பாய்ந்தோடியது.... பரிபாடல் 10:1-8

"மலைவரை மாலை அழிபெயல் காலை
செலவரை காணாக் கடல்தலைக் கூட
நிலவரை அல்லல் நிழத்த விரிந்த
பலவுறு போர்வைப் பருமணல் மூஉய்
வரிஅரி ஆணு முகிழ்விரி சினைய"

"மாந்தீம் தளிரொடு வாழையிலை மயக்கி
ஆய்ந்து அளவா ஓசை அறையூஉப் பறைஅறையப்
போந்தது வையைப் புனல்...."

கோதாவரியழகு : (கம்ப., ஆரணிய., சூர்., தொடக்க 2 பா:)

புவியினுக்கு அணியாய், ஆன்ற பொருள்தந்து, புலத்திற்று ஆகி,
அவிஅகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறிஅ ளாவி,
சவியுறத் தெளிந்து, தண்ணென் ஒழுக்கமும் தழுவி, சான்றோர்
கவிஎன, கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்!

வண்டுறை கமலச் செவ்வி வாள்முகம் பொலிய, வாசம்
உண்டுறை குவளை ஒண்கண் ஒருங்குற நோக்கி, ஊழின்
தெண்திரைக் கரத்தின் வாரி, திருமலர் தூவி, செல்வர்க்
கண்டடி பணிவ தென்ன, பொலிந்தது கடவுள் யாறு.

கடல்

எல்லை அறியாப் பெருங்கடலே....
விலைகொள் முத்தளிக்கும் கடலே, – சிப்பி
    விளையா டற்குதவும் கடலே!

மழைக்கு மூலமும் நீகடலே! – அதை

வாங்கி வைப்பதும் நீகடலே! - கவிமணி

நீலத் திரைக்கடல் ஓரத்திலே – நின்று

நித்தம் தவம்செய் குமரிஎல்லை...... – பாரதியார்

**தென்றல்**

தென்றல் குலவிவரும் – நல்ல

தென்மொழி தேனைத் தரும்.....

நாடுகள் சுற்றுவதால் – பல

நல்லன கற்றுவரும்

கேடுள வண்டல்களை – விட்டுக்

கேண்மையைக் கொண்டுவரும்

மானிட வர்க்கமெலாம் – ஒரு

மாதாவின் மக்களென்ற

ஞான உபதேசம் – தென்றல்

நம்மிடை யேபேசும்

என்றும் இருந்துலவி – புவி

எங்கும் திரிந்திடலால்

தென்றல் வருந்தோறும் – நம்முள்

தெய்வ நினைப்பூறும்! – நாமக்கல் கவிஞர்

தாமரைக்குளம், முல்லைப் பந்தர் கடந்து, தன்மையும் நன்மணமும் மென்மையும் கொண்டு ஆங்காங்கே சென்று நல்ல கலைகளைத் தேர்ந்துவரும் அறிவார்ந்த மாணவனைப் போல இயங்கும் தென்றல், செந்தமிழில் உயிர்த்து, பொதிகையில் பிறப்பெடுத்து, சந்தன மணம் கமழ உலா வருகின்றது மற்றொரு கவிஞர்தம் கற்பனையில்! பா எது? பாடியவர் யார்?

**தென்றல்! பாரதிதாசனார்:**

பொதிகைமலை விட்டெழுந்து சந்த னத்தின்
புதுமணத்தில் தோய்ந்துபூந் தாது வாரி,
நதிதழுவி அருவியின்தோள் உந்தித் தெற்கு
நன்முத்துக் கடல்அலையின் உச்சி தோறும்
சதிராடி மூங்கிலிலே பண்எ முப்பித்
தாழையெலாம் மடற்கத்தி சுழற்ற வைத்து
முதிர்தெங்கின் இளம்பாளை முகம்சு வைத்து
முத்துதிர்த்துத் தமிழகத்தின் வீதி நோக்கி.....

அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச் செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க, என்றன்
சிந்தை உடல் அணுஒவ்வொன் றும்சி லிர்க்கச்
செல்வமொன்று வருமதன்பேர் தென்றல் காற்று!

மனமும் உடலும் குளிர வீசும் மந்த மாருதத்தை,
மலர்தமிழில் வைத்தார் வள்ளற் பெருமான்:

மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே!
மென்காற்றில் விளைசுகமே! சுகத்திலுறும் பயனே!

தென்றலில் மணக்கும் ஆன்மீகச் சிறப்பை, அருள்விளக்க மாலை, திருவருட்பா ஆறாம் திருமுறை, கோடையிலே... எனத் தொடங்கும் எண்சீர் விருத்தம் இயம்பும்.

மேற்கிலிருந்து வீசுவது கோடைக்காற்று; கிழக்கிலிருந்து வீசுவது கொண்டல்; வடக்கிலிருந்து வீசுவது வாடைக்காற்று; தென்குமரி முக்கடலில், தென்பொதிகைத் தண்மலரில், படிந்தும் துழாவியும் புறப்பட்டு வருதலால் போலும், தெற்கிலிருந்து வீசுவது தென்றல் காற்று!

**மலர்வனக் காட்சி:**

மகிழ்ச்சியால் மனம் துள்ளும் மலர்வனக் காட்சியைக் கவின்தமிழில் காட்டுகிறது மணிமேகலை:

கதிரொளிக்கு அஞ்சித் தஞ்சம் புகுந்தது போல, அடர் இருள் (பகலிலும்) நிலவும் வள மலர்வனம் புகாரில் இருந்தது ; அதன் பெயர் உவவனம், புல்லாங்குழலிசை போல, வண்டினம் ஒலி கூட்டும். தும்பியின ஒலி, யாழ் இசை போலும் ! வெயில் நுழையா இளமரக்காவில், குயில் நுழையும் (கூவும்)! மேடையில் ஆடும் பெண்களைப் போல மயில்கள் ஆட, சுவைஞரைப் போல மந்திகள் கண்டு மகிழும் !

"பரிதியம் செல்வன் விரிகதிர்த் தானைக்
கிருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழில்,
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட,
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
வெயில்நுழை பறியாக் குயில்நுழை பொதும்பர்,
மயிலா டரங்கின், மந்திகாண் பன காண் !"

## தொடரும் காட்சி

இப்பூங்காவில், பளிங்குபோல் தெளிவான நீர்ப்பொய்கை இருந்தது. பச்சை இலைகள் அணி செய்ய, நீர்ப்பூக்கள் நிரம்ப மலர்ந்து மகிழ்வூட்டின. தன்னிகரில்லா மணம் நிறை தாமரைப்பூ மலர்ந்திருந்தது; அம்மலரில் அரச அன்னம் இனிது வீற்றிருந்தது காணுமாறு, பொய்கைக் கரையில் நின்று ஒரு மயில் நடனமிடுகின்றது ! நடனத்திற்குரிய மத்தள ஒளி எது? கம்புட் சேவல் குரல் முழக்கமே ! வாய்ப்பாட்டு உளதோ? உளது.... மரக்கொம்பில் இருக்கும் கருங்குயிலின் பாட்டிசை:

"மாசறத் தெளிந்த மணிநீர் இலஞ்சிப்
பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைநின்று
ஒருதனி ஓங்கிய விரைமலர்த் தாமரை,
அரச அன்னம் ஆங்கினி திருப்பக்
கரைநின் றாலும் ஒருமயில் தனக்குக்

கம்புட் சேவல் கனைகுரல் முழவாக்
கொம்பர் இருங்குயில் விளிப்பது காணாய் !"

– மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்

ஈர்ஆயிரம் ஆண்டு உருண்டோடினும், இதுபோன்ற இயற்கையழகை எடுத்துச் சீர்கோத்த பாமாலை உருவாக்கம் நடைபெறல் தொடரும். இதனை உறுதிசெய்ய, இராமாவதாரம், பாலகாண்டம், நாட்டுப்படலம் பாட, காட்டும் மருதநிலக் காட்சி காணலாமே!

தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளை கண்விழித்து நோக்க,
தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம்வீற் றிருக்கும் மாதோ !

– கவிப்பேரரசர் கம்பர்

மயில்

அழகிய மயிலே ! அழகிய மயிலே !
அஞ்சுகம் கொஞ்ச, அமுத கீதம்
கருங்குயி லிருந்து விருந்து செய்யக்
கடிமலர் வண்டுகள் நெடிது பாடத்
தென்றல் உலவச் சிலிர்க்கும் சோலையில்
அடியெடுத் தூன்றி அங்கம் புளகித்
தாடுகின்றாய் அழகிய மயிலே....
ஆயிரம் ஆயிரம் அம்பொற் காசுகள்
ஆயிரம் ஆயிரம் அம்பிறை நிலவுகள்
மரகத உருக்கின் வண்ணத் தடாகம்
ஆனஉன் மெல்லுடல், ஆடல் உன் உயிர்..... !

– பாவேந்தர் பாரதிதாசன்

இவ்வளவு சிறப்புகளைக் கொண்டதால்தான், தேசத்தின் மனம் கவர்ந்த பறவையாய், வண்ண மாமயில் வலம் வருகின்றது !

தொடரும்.....

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 November 2013 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month





# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- ✦ இளம் இலக்கியம் ✦ இளங்கலை ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர் ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.